முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2021 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2021-03-13
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டமொன்றின் ஒரு பண்பாக (characteristic) இருப்பது எது?

(1) பொருளாதாரப் பண்டம் ஒன்றின் உற்பத்தியில் சந்தர்ப்பச் செலவு இல்லை.

(2) பொருளாதாரப் பண்டமானது உற்பத்திச் செயன்முறை ஒன்றின் ஒரு வெளியீடாகும்.

(3) வழங்கலில் அரிதானதன்மை இல்லை.

(4) பொருளாதாரப் பண்டம் இயற்கையின் கொடையாகக் கருதப்படுகிறது.

**1.2** பின்வருவனவற்றிலிருந்து பொருளியலில் ''அரிதானதன்மை (scarcity)'' தொடர்பான மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) இது உலகிலுள்ள ஏழை நாடுகளுடன் மாத்திரம் தொடர்புடைய ஒன்றாகும்.

(2) இது பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான வளங்களின் மாற்றுப் பயன்பாடு பற்றி விபரிக்கிறது.

(3) இது மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான வளங்களின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவாகும்.

(4) இது பயன்படுத்தப்படாதிருக்கும் வளங்களை பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் போது ஏற்படுகிறது.

**1.3** குறிப்பிட்ட தீர்மானமொன்றின் தெரிவுகளில் உள்ள அடுத்த சிறந்த மாற்று எதிர்வுகூறல் (alternative foregone) பெறுமதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

| | |
|---|---|
| (1) பொருளாதாரக் கிரயம் | (2) சராசரிக் கிரயம் |
| (3) சந்தர்ப்பச் செலவு | (4) எல்லைக் கிரயம் |

**1.4** பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எது?

(1) அளத்தகு பயன்பாட்டுக் (Cardinal Utility) கோட்பாடானது பொருள் ஒன்றை நுகர்வதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் திருப்தி மட்டத்தை அளவிட முடியாது எனக் கருதுகிறது.

(2) ஒப்புமைப் பயன்பாட்டுக் (Ordinal Utility) கோட்பாடானது பயன்பாட்டை அளவிட முடியும் எனக் கருதுகிறது.

(3) மொத்தப் பயன் (Total Utility) என்பது பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் எல்லைத் திருப்தி (marginal satisfaction) ஆகும்.

(4) எல்லைப் பயன் (Marginal Utility) என்பது தரப்பட்டதொரு காலப்பகுதியில் பொருள் ஒன்றின் மேலதிக அலகு ஒன்றை நுகர்வதன் மூலம் ஒரு நபர் அடைந்து கொள்ளும் மேலதிக திருப்தியாகும்.

**1.5** பின்வருவனவற்றுள் கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பது எது?


(1) தொடர்புடைய பொருள் அவசியமானதா அல்லது ஆடம்பரமானதா என்பது.

(2) பொருளுக்காகக் கிடைக்கக்கூடிய பதிலீடுகளின் எண்ணிக்கை

(3) பொருளுக்காகச் செலவு செய்த வருமானத்தின் சதவீதம்

(4) மேலுள்ள யாவும்.

**1.6** **பண்டம் A** இற்கான பின்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:




சந்தையில் **பண்டம் A** விற்கப்படும் உயர்ந்தபட்ச விலை ரூபா 100/- எனின் நுகர்வோர் மிகையானது:

(1) ரூபா 2,500/-. (2) ரூபா 5,000/-. (3) ரூபா 1,250/-. (4) ரூபா 1,000/-.

**1.7** பின்வருவனவற்றுள் இலத்திரனியல் பணத்திற்கான (e-money) ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) சேமிப்பு வைப்புகள் (2) கடன் அட்டைகள்

(3) நிலையான வைப்புகள் (4) திறைசேரி உண்டியல்கள்

**1.8** கேள்விச் சட்டம் (law of demand) ஆனது :

(1) பண்டமொன்றின் விலைக்கும் சந்தையில் அந்தப் பண்டத்தின் கேள்விக் கணியத்திற்கும் இடையிலான நேர்மாறு தொடர்பை விளக்குகிறது.

(2) வருமானத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக கேள்வியில் ஏற்படும் மாற்றம் பற்றி விளக்குகிறது.

(3) பண்டம் ஒன்றிற்கான கேள்வியில் ஏற்படும் மாற்றம் காரணமாக மூலப்பொருளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றம் பற்றி விளக்குகிறது.

(4) பண்டம் ஒன்றின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக மற்றுமொரு பண்டத்திற்கான கேள்வியில் ஏற்படும் மாற்றம் பற்றி விளக்குகிறது.

**1.9** பின்வருவனவற்றில் சென்மதி நிலுவைக் கூற்றின் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பது எது?

(1) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (2) பொருட்களின் ஏற்றுமதிகள்

(3) அரசாங்க மானியங்கள் (4) பொருட்களின் இறக்குமதிகள்

**1.10** 2019 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க, 2019 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) 6 %. (2) 2.3 %. (3) 3.2 %. (4) 4.8 %.

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** நிறுவனத்தின் எல்லை வருமானம் அதன்................. *(எல்லைக் கிரயத்திற்கு / சராசரிக் கிரயத்திற்கு)* சமனாக இருக்கின்ற புள்ளியில், நிறுவனத்தின் இலாபம் உச்சமாக இருக்கும்.

**1.12** நுகர்வோர் வருமானம் அதிகரிக்கின்றபோது, கேள்வி வளையியானது................. *(இடது பக்கத்திற்கு / வலது பக்கத்திற்கு)* நகர்கிறது.

*கீழே **1.13** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.13** கடன்களுக்காக ஓர் உயர்ந்தபட்ச முதிர்வுக் காலத்தை அமைப்பது, இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் ஓர் அளவுரீதியான (quantitative) கட்டுப்பாட்டு சாதன வழிமுறையாகும்.

**1.14** பொருளாதாரத் தேய்மானமானது நேரில் கிரயத்திற்கான உதாரணம் ஒன்றாகும்.

**1.15** பொருள் **A** மற்றும் பொருள் **B** இற்கிடையிலான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி மறைப் பெறுமானமாக (negative) இருக்குமெனின், அப்பொருட்கள் பதிலீட்டுப் பொருட்களாகக் கருதப்படும்.

***1.16** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** நிரம்பல் வளையியை இடது பக்கத்திற்கு நகர்த்துகின்ற இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.17** “கேள்விக் கணியத்தில் மாற்றம் (change in quantity demanded)” என்னும் பதத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** அளவுத்திட்ட விளைவுகளை (returns to scale) அதிகரிக்கும் இரண்டு (02) காரணிகளைக் கூறுக.

**1.19** எல்லை வருமானம் (MR) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** அரசாங்கம் சந்தையில் தலையீடு செய்யும் இரண்டு (02) வழிகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பொருளாதாரம் ஒன்றின் நான்கு (04) பிரதான பொருளாதார வளங்களை (உற்பத்திக் காரணிகளை) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) சந்தைப் பொருளாதார முறைமையின் நான்கு (04) பண்புகளை (characteristics) **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(c) (i) பொருளியலில் “தெரிவு (Choice)” என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) உற்பத்திச் சாத்திய வளையியின் இரண்டு (02) எடுகோள்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) **பொருள் X** தொடர்பான கேள்விச் சமன்பாடு (Qd) மற்றும் நிரம்பல் சமன்பாடு (Qs) என்பன கீழே தரப்பட்டுள்ளன :

$$Qd = 3,600 - 7P$$

$$Qs = -200 + P$$

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) உற்பத்திச் செயன்முறை ஒன்றிலுள்ள குறுங்கால ஓட்டம் (short run) மற்றும் நீண்டகால ஓட்டம் (long run) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தனியுரிமைப் (monopolistic) போட்டிச் சந்தையொன்றின் இரண்டு (02) பண்புகளை **நிரற்படுத்துக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) வர்த்தக வங்கியொன்றின் நான்கு (04) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) வர்த்தக வங்கிகள் தொடர்பில் இலாபத்தன்மை (profitability) மற்றும் திரவத்தன்மை (liquidity) ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) பணவீக்கம் (inflation) ஏற்படுவதற்கான இரண்டு (02) காரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) சர்வதேச வர்த்தகத்தின் இரண்டு (02) பிரதிகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) பாதுகாப்புவாதத்தின் (protectionism) இரண்டு (02) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் (devaluing) செய்வதால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய மூன்று (03) விளைவுகளை (consequences) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 600 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் | 400 |
| தொக்கு மாற்றங்கள் | 200 |
| ஏற்றுமதிகள் | 400 |
| இறக்குமதிகள் | 250 |
| வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானம் (நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம்) | -100 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

செலவின அணுகுமுறையைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில் (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(B) (a) அரசாங்கத்தின் நாணயக் கொள்கை (Monetary Policy) மற்றும் நிதிக் கொள்கை (Fiscal Policy) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பாதீட்டுப் பற்றாக்குறை (budget deficit) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(C) (a) சந்தைப் பொருளாதாரத்தில் வினைத்திறனற்ற வகையிலான வள ஒதுக்கீட்டைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் இரண்டு (02) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) அரசாங்கத்தின் தோல்விக்கான (failure of government) இரண்டு (02) காரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |